# நீங்காத நினைவுகளின் 25 அண்டுகள்

கம்பர்மலையின் கலங்கரை விளக்காய் விளங்கியவர்களை நினைவு கூரல் என்பது எமது தலையாய் கடமையாகக் கொள்கின்றோம். ஆங்கே பல மூத்தோர்களும், கல்விமான்களும் ஊருக்காய் ஆற்றிய பணிகளை மறுக்காமல் மறக்காமல் நினைவு கூர்ந்து எமது நன்றியறிதலை தெரிவிப்போமாக.

இந்த வகையில் எங்களின் கல்வி மேன் நிலையாளன் அமரர். திரு. வைரமுத்து சிவகுரு அவர்கள் அமரத்துவம் அடைந்த இருபத்தைந்தாவது ஆண்டை அறியத்தருவதில் பெருமிதமடைகின்றோம். இவர் நமதூரின் முன்னேற்றத்தின் பெரும் பங்காற்றில் திரு. வைரமுத்துவின் மகனாவார்.

வைரமுத்து – வைராள் தம்பதிகளின் மூன்றாவது பிள்ளையான இவர்தான் எமதூரின் முதல் பொறியலாளராவார். இவர் கல்வி கற்கும் போது எமது ஊரில் எந்த வேறுபாடின்றி பலர் கல்வி பயின்றனர். இப்படி கல்விப் பணியை அவர் புரிவதற்காக இவர் தந்தை தனது வீட்டின் கூடத்தில் கரும்பலகை செய்து; பெற்றோமக்ஸ் மூலம் ஒளி கொடுத்தும், தாயார் அந்த மாணவர்க்கான பணிவிடை செய்தும் உந்து சக்தியாக விளங்கினர்.

இவர் நெறியில் ஆரம்ப வகுப்புகளிலிருந்து க.பொ.த (உயர்தரம்) வரை கற்று பின்னர் எமதூரின் முதல் இயந்திரம் பொறியலாளர் ஆன அமரர் திரு. கணபதி சடாட்சரம் அவர்கள் எமக்கு மேலும் பெருமை சேர்த்து தந்தார்.

திரு. சிவகுரு அவர்கள் 1971ம் ஆண்டு லண்டன் ஏகினார். அங்கேயும் அவர் பணி தொடர எமதூரிலிருந்து பலரை அழைத்து படிக்க வைத்து பெரும் பட்டதாரிகளாக்கினார். இவர் வெறும் கல்விமான் மட்டுமல்லாமல் பல துறை சார்ந்தவராக எமதூரில் பணியாற்றியுள்ளார். குறிப்பாக கம்பர்மலை யங் கம்பன்ஸ் விளையாட்டுக் கழக ஆரம்ப கர்த்தாகளில் முதன்மையானவர். இவர் நெறியில் தான் 1961ம் ஆண்டிலிருந்து வருடாந்த விளையாட்டுப் போட்டியை நடாத்தி வந்துள்ளார்.

அப்போதே அங்கே நடந்த விளையாட்டுகள் யாவும் சர்வதேச நெறிக்கமையவே நடந்து. விளையாட்டுகளுக்குத் தேவையான உபகரணங்கள் யாவும், இவர் நிமித்தமே. உடுபிட்டி அ.மி.கல்லூரியிலிருந்து பெற்று தரம் மிக்க விளையாட்டுக்களை நடாத்த உறுதுணையாய் இருந்துள்ளார். பல்கலைக் கழகத்திலிருந்தபோது ,கிரிக்கட்' விளையாட்டையும் அறிமுகப் படுத்தினர்.

மற்றும் கரப் பந்தாட்டச் சுற்றல் போட்டி மல்யுத்தம் போட்டியாவும் வருடாந்த எமதூரில் அரங்கேறுவதில் இவர் பங்கு முழுமையாக இருக்கும்.

மேலும் இவர் நாடகத்துறையில் மிக வல்லமை பெற்றவர். பல்கலைக் கழகத்திலும் நாடகங்கள் நடாத்தி பரிசுகள் பெற்றுள்ளார் அதே போல் எமதூர் இளைஞர்களை ஒன்று திரட்டி நாடகங்களை எழுதி நெறிப்படுத்தியும் உள்ளார். அதன் சான்றாக யார் குற்றவாளி தொடுவானம் புதிய பாதை போன்ற நாடகங்கள் குறிப்பிடக் கூடியனவையாகும்.

அத்துடன் நாட்டில் பத்திரிகைகளில் சிறுகதைகளும் எழுதி பிரசுரமாகின. அது மட்டுமல்லாமல் பந்தி எழுத்தாளராகவும் தனது பணியை லண்டனில் புரிந்துள்ளார். இத்துடன் அரசியலில் கம்யூனிட் கட்சியின் தீவிர செயட்பாட்டாயராகவும், மத்திய கமிட்டி உறுப்பினராகவும் இருந்தார், தீண்டாமை ஒழிப்பு வெகுஜனப் போராட்டத்திலும் தனது பல்கலைகழகத் தோழர்களுடன் இணைந்து உன்னதமாகச் செயற்பட்டவர். இதன் காரணமாக நாட்டில் இருப்பதற்கும், தொழில் பெறுவதற்கும் பல சிக்கல்களைச் சந்தித்தன் நிமித்தமே அவர் வெளிநாடு சென்றார்.

கம்பர்மலை கலாவாணி சன சமூக நிலையம் தான் இவரின் மிகச் சிறந்த செயற்பாட்டுத்தனமாக இருந்துள்ளது. இதனால் கருத்தால் ஒன்றுபட்ட ஊர், நாடு, தேசம் என்ற பரந்த பார்வைக்குள் இவர் செயல் விரிந்து பரந்து பட்டதாக இருந்தது. தனக்கு மூத்தவர்களுடனும் இளையவர்களுடனும் இணைந்தே வழி நின்றார்.

1973ம் ஆண்டு அவர் திருமணம் ஆனது மனைவியையும் அழைத்து லண்டனிலேயே வாழ்ந்த இவர் மூன்று குழந்தைகளையும். பெற்று இனிதே வாழ்ந்தவர். அத்துடன் தனது சகோதர்களையும்

அவர்கள் பிள்ளைகளையும் லண்டனுக்கு அழைத்து நல் வழிகாட்டி வாழ்வமைத்துக் கொடுத்த அவர் 1993-6-3 அன்று தனது 50வது வயதையும் எட்டாத நிலையில் காலமானார்.

எனவே ஐக்கிய ராச்சியத்தில் வாழும் நம் ஊரவரும், நம் ஊரும் என்றென்றும் நினைவில் நீங்காது வாழ்வார் என்று இறைந்துகின்றோம்.

-UKF-